மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண். 125 /2021

வாக்குமூலம்: வா.சா.2 – நாட்டுத்துரை

13.12.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) நான் வழக்கில் பிரதிவாதி இல்லை என்றால் சரிதான். எனக்கு சாட்சியமளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். முருகசாமி வகையறா கேட்டுக் கொண்டதற்காக நான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் நானாக சாட்சியம் அளிக்க வரவில்லை என்றாலும், முருகசாமி வகையறா கேட்டுக் கொண்டதால்தான் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்குச் சொத்து மேற்குப் பக்கம் சின்ன பழனிச்சாமிக்கு பாத்தியம்பபட்ட நிலம் உள்ளது என்றால் சரிதான். கிருஷ்ணசாமி கவுண்டர் எனது பாட்டனார் என்றால் சின்னப்பட்டனார். வேலுச்சாமி கவுண்டர் யார் என்றால் எனது பங்காளிகள்.

2) சின்ன பழனிச்சாமி நிலத்துக்கு வடக்குப் பக்கம் கிருஷ்ணசாமி, வேலுச்சாமி ஆகியோர் ஏற்படுத்திய பாதை உள்ளது என்றால் அது பொதுப் பாதை. அந்தப் பாதை T.K.புதுார் – கலிக்கநாயக்கன்பட்டி செல்லும் சாலை வரை சென்றடையும் என்றால் இல்லை. T.K.புதுாரிலிருந்து கலிக்கநாயக்கன்பட்டிக்கு 30 அடி அகலத்தில் பாதை உள்ளது என்றால் அது ஊருக்கு வடக்குப் பக்கம் உள்ளது. மேற்படி பாதை வழியாக பிரதிவாதிகள் இடத்திற்கு சென்று வரலாம் என்றால் முடியாது. மேற்படி பாதை வழியாக பிரதிவாதிகள் சென்று வரலாம் என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி நிலத்திற்கு கிழக்குப் பக்கம் பழனிச்சாமி நிலம் உள்ளது என்றால் சரிதான்.

3) அதற்கு கிழக்குப் பக்கம் காளிமுத்து என்ற பெரியகண்ணு நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி காளிமுத்து என்ற பெரியகண்ணு அவரது நிலத்தைத் சுற்றி கம்பி வேலி அமைத்துள்ளார் என்றால் சரிதான். பொதுவாக விவசாய நிலங்களுக்கு இடையே 3 அடி பாதை இருக்கும் என்றால் 4 அடி வரை இருக்கும். வாதி நிலத்திற்கு வடக்குப் பக்கம் 3 அடி வரப்பு உள்ளது என்றால் 3 அடி இருக்காது. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள பாதை எங்கு தொடங்கி, எங்கு முடிகிறது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் சொல்வது போல் பாதை எதுவும் இல்லை என்றாலும், அதனால் தான் மேற்படி பாதை யாருடைய இடத்தில் தொடங்கி, யாருடைய இடத்தில் முடிகிறது என்று நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

4) பிரதிவாதிகள் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் இல்லை. பிரதிவாதிகள் எனது உறவினர்கள் என்றாலும், வழக்கிற்காக இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி வெளியூர்காரர் என்றால் சரிதான். வாதி வெளியூர்காரராக என்பதால் தான் அவர் நிலத்தைச் சுற்றி கம்பி வேலி அமைக்க பிரதிவாதிகள் இடையூறு செய்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பாதை பொதுப் பாதையாக இருந்திருந்தால் நானும் பிரச்சனை செய்திருப்பேன் என்றாலும், இல்லாததால் தான் நான் பிரச்சனை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வாதிகள் உள்ளூர்காரர்கள், எனது உறவினர்கள் என்பதால் தான் நான் பொதுப் பாதை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–S.கபாலீஸ்வரன்,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பழனி.